FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

This Question Paper consists of **31** questions and **7** printed pages.
7 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் **31** வினாக்கள் உள்ளன.

**Roll No.** | | | | | | | | | | | | |

**Code No. 55/AS/3**

**Set A**

# TAMIL

# (தமிழ்)

# (237)

தேர்வு நடைபெறும் நாள்
மற்றும் தேதி : ______________________

தேர்வு மேற்பார்வையாளர்
கையொப்பம் : **1.** ______________________

**2.** ______________________

**பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத் தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A), (B), (C), (D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைதாளில் எழுத வேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் **Code** எண் **55/AS/3-A** விடைத்தாளில் எழுதுங்கள்.

www.FirstRanker.com



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

# TAMIL

## (தமிழ்)

## (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

---

**குறிப்பு :** (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

---

**பொருத்தமான விடையை எடுத்து எழுதுக :**

**1.** வறியவரின் நிலை யாது என்கிறது நாலடியார். **11x1=11**

(A) பசித்திருப்பது

(B) உழைத்து உண்ணல்

(C) கூழ் உணவை கையேந்தி வாங்கி உண்ணல்

(D) சோம்பியிருப்பது

www.FirstRanker.com

**2.** 'தேரை' என்பது :

(A) தாரை (B) தவளை (C) அரவம் (D) காகம்

**3.** திரிகூட இராசப்பக் கவிராயர் குறத்தியர் யானை கொம்புகளால் எதனை இடிப்பர் என்கின்றார் ?

(A) திணை (B) சோளம் (C) நெல் (D) கம்பு

**4.** 'தவிசு' என்பதன் பொருள் :

(A) தபசு (B) இருக்கை (C) கோயில் (D) தவில்



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

5. வள்ளுவர் எழுத்துகள் எதனை முதன்மையாகக் கொண்டுள்ளன என்கிறார் ?
(A) ஒலியை (B) ஒளியை (C) அகரத்தை (D) மொழியை

6. வளர்ந்த இந்தியாவின் கனவு எனக் கலாம் குறிப்பிடுவது :
(A) அனைவருக்கும் வேலை
(B) அனைவருக்கும் கல்வி
(C) அனைவருக்கும் கழிப்பிட வசதி
(D) அனைவருக்கும் இருப்பிடம்

7. காளையர் கோவிலைச் சுற்றி __________ உள்ளது.
(A) ஆறு (B) அகழி (C) கோட்டை (D) சுவர்

8. தண்டலை என்பது யாது :
(A) குறிஞ்சி நிலம் (B) மருத நிலம்
(C) முல்லை நிலம் (D) நெய்தல் நிலம்

9. தென்னாப்பிரிக்காவில் யாருக்கு எதிராக அடக்குமுறை இருந்தது ?
(A) ஆங்கிலேயர்களுக்கு (B) இந்தியர்களுக்கு
(C) கருப்பர்களுக்கு (D) பெண்களுக்கு

www.FirstRanker.com

10. நான், நாம், நாங்கள் என்பவை :
(A) தன்மை இடப்பெயர்கள்
(B) முன்னிலை இடப்பெயர்கள்
(C) படர்க்கை இடப்பெயர்கள்
(D) வினாச்சொற்கள்

11. அடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு :
(A) ஓட ஓட (B) கலகல
(C) அக்கம் பக்கம் (D) தீ! தீ! தீ!



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

12. **கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

இசை பற்றிப் பத்துப்பாட்டில் வரும் பாணாற்றுப் படைகள் நமக்குப்பல உண்மைகளை விளக்குகின்றன. யாழை கையில் வைத்துப் பாடுபவர் யாழ்ப்பாணர் ஆகின்றனர். சிறிய யாழ் வைத்திருப்பவர் சிறுபாணர். பேரியாழை வைத்திருப்பவர் பெரும்பாணர். அவர்களது யாழைப்பற்றியும் அவர்கள் எழுப்பும் இன்னிசையைப் பற்றியும் மூன்று பெரும்பாடல்கள் நன்கு பேசுகின்றன. ஆடுபவர்களைக் கூத்தர் என்பர். கூத்தியாற்றுவர் கூத்தர் ஆவர். அவர்களைப் பற்றிய ஒரு நூலும் பத்துப்பாட்டில் உண்டு. அதன்பெயர் கூத்தராற்றுப்படை ஆகும். இவ்வாறு கலைகளையே காட்டிக் கொண்டிருக்கும் பேரிலக்கியங்கள் தமிழ்நாட்டில் அன்று பல தழைத்திருந்தன. கற்றார் மட்டுமன்றி கல்லாதவரும் காட்ட விரும்பும் பொருள் பற்றி நன்கு புரிந்துகொள்ள உதவுவது நாடகம். இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தை நாடக நூல் என்பர்.

**வினாக்கள் :**

1. இசை பற்றி கூறும் நூல்கள் யாவை ? 2
2. யாழ்ப்பாணர், பெரும்பாணர், சிறுபாணர் – விளக்குக. 3
3. கூத்தர் எனப்படுபவர் யாவர் ? 2
4. கூத்தரைப் பற்றிய செய்திகளைத் தரும் நூல் எது ? 2
5. நாடகத்தின் தன்மை குறித்து எழுதுக. 2

13. **பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

எப்படியும் வாழலாம் என்ற எண்ணம்
    இடர்ப்பாடு தொடர்ந்துவர ஏதுவாகும்
இப்படித்தான் வாழ்ந்திடுக என்ற கொள்கை
    இன்பமே தருமன்றித் துன்பம் தாரா
எறும்பினது சுறுசுறுப்பை ஏற்று நித்தம்
    எண்ணத்தில் பரபரப்பைக் காட்ட வேண்டும்
எருதைப்போல் அயராது உழைப்பை நாமும்
    எல்லோதும் செயலிலே செய்தல் வேண்டும்

www.FirstRanker.com

**வினாக்கள் :**

1. இடர்ப்பாடு தொடரக் காரணம் யாது ? 2
2. இன்பம் தரும் கொள்கை எது ? 1
3. எறும்பு நமக்குக் கூறும் கருத்து யாது ? 2
4. அயராது உழைப்பதற்கு ஆசிரியர் கூறும் உவமை யாது ? 1



www.FirstRanker.com

**14.** இந்தியாவில் மனித உரிமை என்றால் என்ன பொருள்படும் ? **1**

**15.** நம் நாடு வளர்ந்த நாடாக மாறும்போது அதன் நிலைமை எப்படியெல்லாம் இருக்குமென கலாம் கூறுகிறார் ? **1**

**16.** கற்றறிந்த புலவர் எப்படிப் பழகுவர் என்கிறார் வள்ளுவர் ? **1**

**17.** குறுந்தொகைக்கு அப்பெயர் அமையக் காரணம் யாது ? **1**

**18.** தமிழில் மொழி பெயர்க்க **2**

(A) Cheque

(B) Time Table

**19.** (A) பிரித்து எழுதுக. **4x½=2**

(i) நலவாழ்வு (ii) பாம்பின

(iii) பழியாய (iv) பிறிதுழியில்

(B) கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு சொற்களை எழுதுக. **2**

(i) அம் (ii) தை

(C) கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக. **2**

(i) குளிர்காலத்தில் சென்றவர் __________ திரும்பினார்.

(ii) லட்டு இனிக்கும். பாகற்காய் __________.

(D) கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள்தரும் வேறு சொற்களை எழுதுக. **2**

(i) அம்புலி (ii) அதீத

(iii) சீரிய (iv) வெருவி

**20.** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. **2**

(i) தட்டிக் கொடுத்தல் (ii) கடை கட்டுதல்

**21.** குற்றால மலை உச்சியில் உருவாகும் அருவி எது ? **1**

www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

**22.** ஊர்வலங்களால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் குறித்து குறிப்புரை எழுதுக. **4**

**23.** கல்வி கற்பது பற்றிய பழமொழி நானூற்றின் கருத்துக்கள் யாவை ? **5**

**24.** குளத்து நீரை மாசுபடுத்தக்கூடாது என்பது குறித்து நகராட்சி கொடுக்கும் அறிவிப்பினை எழுதுக. **5**

**அல்லது**

ஹோலிப் பண்டிகையின்போது இயற்கை வண்ணப்பொடிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்த விளம்பர அறிவிப்பினை எழுதுக.

**25.** (A) கொல்-கொள் பொருள் வேறுபாடு கூறி தொடரில் அமைத்து எழுதுக. **2**

(B) ஊளையிடுதல் – கத்துதல் என்னும் ஒலிகள் எவ்விலங்குகளுக்குரியவை ? **2**

**26.** உமது பள்ளித் தமிழ் மன்றம் நடத்தும் போட்டிகள் குறித்த செய்திகளை அறிவிப்புப் பலகையில் இடம் பெறுமாறு அட்டவணை தயாரிக்க. **5**

**அல்லது**

பேருந்தில் பயணம் செய்வதற்கான முன் பதிவு விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்க. (32, கம்பன் தெரு. திருநெல்வேலியில் வசிக்கும் நீ உன் தாய் தந்தையருடன் 24.4.2017 அன்று நாகர்கோவிலிலிருந்து சென்னை வருவதற்காக உனது பெயர் புகழேந்தி என்றும் வண்டி எண் 2641 என்றும் கொண்டு இப்படிவத்தைப் பூர்த்தி செய்க.)

பயணம் செய்வோர் எண்ணிக்கை: (அ)..................
வண்டி எண் (ஆ) ............. புறப்படும் தேதி (இ) ..................
படுக்கை (எண்ணிக்கை): (ஈ)......... புறப்படும் இடம்: (உ)...... சேருமிடம் (ஊ)...........

| வ.எண். | பெயர் (பதினைந்து எழுத்துக்களுக்கு மிகாமல்) | பால் (ஆ/பெ) | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி..........................
.........................................................................................
.........................................................................................

கையொப்பம்
....................

www.FirstRanker.com



www.FirstRanker.com

FirstRanker.com
Firstranker's choice
www.FirstRanker.com www.FirstRanker.com

27. காந்தியாரின் தென்னாப்பிரிக்கப் பயண அனுபவங்களை விவரிக்க. 5

**அல்லது**

சங்குத் தேவனின் தர்மம் என்ற கதை வழி முத்தாச்சிக் கிழவி பற்றி எழுதுக.

28. பிழை திருத்தம் செய்க : 5

1. சூறிய ஒளி கன்னைக் கூசியது.
2. சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தேன்
3. மலரின் மனத்தல் மணதைப் பரிகொடுத்தேன்
4. மாந்தோட்டத்தில் குயில் கத்தியது
5. உன் தந்தை நாளை வந்தார்

29. கோடை விடுமுறையைக் கழிக்க அழைப்பு விடுத்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக. 7

**அல்லது**

உங்கள் ஊரில் தெருவிளக்குகள் அமைத்துத் தர வேண்டி நகராட்சித் தலைவருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

30. ஏதேனும் ஒன்றுக்கு நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக. 5

(அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகு

(ஆ) கற்றது கை மண் அளவு

(இ) முயற்சி திருவினையாக்கும்

31. ஏதேனும் ஒன்றுக்கு இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 10

(அ) இன்பச் சுற்றுலா

(ஆ) நூல் நிலையம்

(இ) நான் விரும்பும் தலைவர்

www.FirstRanker.com

- o O o -



www.FirstRanker.com